சிவமயம்



## ஸ்ரீமதி ஜெயந்தி சோமதேவக்குருக்கள்

அவர்களின்

ஓராண்டு நினைவாக வெளியிடப்படும்

# ஜெயதீபம்

24.08.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிலவ வருடம் ஆவணி மாதம் 08ம் நாள் [4.09.2021]

சனிக்கிழமை அபர பக்க திரயோதசி திதியில்

பிரதோசநன்நாளில்

சிவபதப்பேறு அடைந்த

ஸ்ரீமதி. ஜெயந்தி சோமதேவக்குருக்கள்

அவர்களின்

முதலாம் ஆண்டுநினைவாக வெளியிடப்படுகிறது.

24.08.2022

# ஜெயதீபம்

நீர்வேலி

அரசகேசரிப் பிள்ளையார் தேவஸ்தானம்

யாழ்ப்பாணம்.

இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அமரர் ஸ்ரீமதி.ஜெயந்தி சோமதேவக்குருக்கள்
அவர்தம் தூய ஆத்மா எம் பெருமான்
திருவடி நிழலில் நிலையான நித்திய
ஆத்மா சாந்தி பெற
இந்நினைவுமலர்
ஜெயதீபம்
அவர்தம் பொற்பாதங்களுக்கு
காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அமரர்

# ஸ்ரீமதி ஜெயந்தி சோமதேவக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோத்திரத் திரட்டு

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தினிளம்பிறை போலும் எயிற்றினை
நந்திமகன் தனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

பாலுந்தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன் -கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத்தமிழ் மூன்றுந்தா.

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின்முற்றுறக்
கண்ணுதலுடைய தோர்களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## தொகுதி -01

### தேவாரம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே

### திருவாசகம்

நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.

### திருவிசைப்பா

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள்வீற் றிருந்த
அங்கணா போற்றி அமரனே போற்றி
தங்கணான் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கள்நாயகனே போற்றி யேழிருக்கை
இறைவனே போற்றியே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்

## அபிராமி அந்தாதி

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைகண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே.

## திருப்புகழ்

துள்ளுமத வேட்கைக் கணையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மெள்ள வருசோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருச்சிற்றம்பலம்

*தொல்லையிரும் பிறவிச் சூழுந் தளைநீக்கி*
*அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை*
*மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்*
*திருவாசகம் என்னும் தேன்*

**சிவபுராணம்**

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க !
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க !
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க !
ஏகன் அனேகன் இறைவ னடிவாழ்க !
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க !
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க !
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க !
கரங்குவிவா ருண்மகிழும் கோன்கழல்கள் வெல்க !
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க !
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான நாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம ளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம் பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவமென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் செல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரிகாப்பு பாடல்

விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகி'ாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரணை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்து விடு வையகத்தில் வாழ விடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பை புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கும் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்மைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ் சுடரே காளியுனைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலுள் ளோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்கா தேவி அஷ்டகம்



பகவதி தேவி ா்வத தேவி
பலமிகு தேவி துர்க்கையளே
ஜெகமது யாவும் ஜெயஜெயவெனவே
சங்கரியுன்னைப்பாடி டுமே
ஹநஙந தகதக பசபச வெனவே
தளிர்த்திடு ஜோதி யானவளே
ரோகந வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா 01

தண்டினி தேவி தஷினிதேவி
கட்கினி தேவி துர்க்கையளே
தந்தன தான தனதன தான
தாண்டவ நடன ஈஸ்வரியே
முண்டினி தேவி முனையொளி சூலி
முனிவர்கள் தேவி மணித் தீவி
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா 02

காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க்கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மான் விழியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 03

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்க்கை யளே
ஊரணி மாயே ஊற்று தாயே
ஊர்த்துவ யாயே ஊர் ஒளியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணி மாயே காருணி தாயே
கானக யாயே காசினியே
ரோகநி வாரணி ஜெய துர்க்கா 04

திருமகளானாய் கலைமகளானாய்
மலைமகளானாய் துர்க்கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய்
பெருவலி வானாய் பெண்மையளே
நறுமல ரானாய் நல்லவ ளானாய்
நந்தினி யானாய் நங்கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா 05

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க் கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாய கியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாய வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 06

கோவுரை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க்கை யளே
நாவுரை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி புஶ்ரீரணையே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய ஜெய சைல புத்திரி பரஹ்ம
சாரிணி சந்திர கண்டி னியே
ஜெய ஜெய கூஷ்மாண்டினி ஸ்கந்த
மாதினி காத்யா யன்ய யளே
ஜெய ஜெய கால ராத்திரி கௌரி
ஸீத்திதா ஸ்ரீநவ துர்க்கையளே
ரோகநிவாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 08

முற்றும்

## நவக்கிரக வழிபாடு

| நவக்கிரகங்கள் | நிறம் | பூசைக்கான பூக்கள் | தானியம் |
|---|---|---|---|
| சூரியன் | சிவப்பு | செந்தாமரை | கோதுமை |
| சந்திரன் | வெள்ளை | வெள்ளரவி | நெல் |
| செவ்வாய் | சிவப்பு | செண்பகம் | துவரை |
| புதன் | பச்சை | வெண்காந்தள் | பயறு |
| வியாழன் | மஞ்சள் | முல்லை | கடலை |
| வெள்ளி | வெள்ளை | வெண்தாமரை | மொச்சை |
| சனி | கறுப்பு | கருங்குவளை | எள் |
| ராகு | நீலம் | மத்தாரை | உழுந்து |
| கேது | பலவர்ணம் | செவ்வல்லி | கொள்ளு |

## ஆலயத்தை வலம் வருதல்

மூன்று முறை விரும்பிய காரியம் நடைபெறும்
ஐந்து முறை காரியவெற்றி
ஏழுமுறை நல்லகுணம்,எண்ணம்,அமைதி உண்டாகும்
ஒன்பது முறை ஆயுள்விருத்தி
பண்ணிரண்டுமுறைஉடல் வலிமை

ஆண்கள் அங்கப்பிரதட்சணம் செய்யலாம், பெண்கள் அடிமேல்அடிவைத்து அஅடிப்பிரதட்சணம் செய்யலாம் பெண்கள் அங்கப்பிரதட்சணம் செய்யக்கூடாது, ஆண்கள் முட்டுக்காலில் நின்று வணங்குதல் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



## சரஸ்வதி துதி

**ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்**
**ஏய உணர்விக்கும் என்னம்மை – தூய**
**உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தின் உள்ளே**
**இருப்பளிங்கு வாரா திடர்.**

1. வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
சக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்தாக
வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பே
சகல கலாவல்லியே.

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்கயாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அளிக்குஞ் செழுந்தமிழ் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளி
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே

4. தூக்கும் பனுவற்றுறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வடநுற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே

5. பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருமென்
நெஞ்சத் தடத்தல ராததென்ன
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவசமுயர்த்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்திருந்தாய்

சகல கலாவல்லியே

6. பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே

7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே

8. சொல்விற்பனமும் அவதானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளி னாசனஞ் சேர்
செல்விக்கரிதன் றொருகால
முஞ்சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே

9. சொற்கும் பொருட்கு முயிராம் மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலத்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம் புயத்தாளே
சகல கலாவல்லியே

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி
யுண்டேனுவிளம்பிலுன்போல்
கண்கண்டதெய்வ முளதோ சககலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்ஷ்மி ஊஞ்சல் பாடல்



லக்ஷ்மி கல்யாணம் வைபோகமே
லக்ஷ்மி கல்யாணம் வைபோகமே - 3

பாற்கடலில் தான்பிறந்து பார்வதியைப் போல் வளர்ந்து
நாற்கரங்களோடு வந்தாய் நாயகியே ஆடுஞ்சல்
(லக்ஷ்மி கல்யாணம் - 2)

மஞ்சல் பூசி திலகம் வைத்து மருதாணி கையெழுதி
அஞ்சனக்கண் அருள் சொரிய அம்மா நீ ஆடூஞ்சல்
(லக்ஷ்மி கல்யாணம் - 2)

கை நிறைய மோதிரமாம் காலில் மெட்டி சதங்கைகளாம்
நெய்தீப ஒளியினிலே நாரணனோடு ஆடூஞ்சல்

பட்டாடை சேலை கட்டி பக்குவமாய் தலைமுடித்து
கட்டான மேனியொடு கண்ணே நீ ஆடூஞ்சல்
(லக்ஷ்மி கல்யாணம் - 2)

இந்திரனும் தேவர்களும் ஈரேழு லோகங்களும்
வந்திருந்து பார்த்திருக்க ஸ்ரீதேவி ஆடுஞ்சல்
(லக்ஷ்மி கல்யாணம் - 2)

வற்றாத வளம் பெருகும் வையகத்தோர் தான் செழிக்க
குற்றால அருவியென்று கொடுத்த வரும் ஆடூஞ்சல்
(லக்ஷ்மி கல்யாணம் - 2)

வறுமையென்னும் பிணியகலும் வாழ்வில் நலம் தான் பெருகும்
பொறுமையிலே கடலானாய் பொன்னம்மா ஆடுஞ்சல்
(லக்ஷ்மி கல்யாணம் - 2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கள குங்குமத் தாயே!
பொங்கும் மங்களம் தருவாயே!
குங்குமத்தை அணிந்திருக்கும் தாயே! என்
குறைகளைத் தீர்க்க வருவாயே
மஞ்சளையும் கொண்டிருக்கும் தாயே - இங்கு
மங்களமாய் வந்திருப்பாய் நீயே!
நெய் விளக்கு ஏற்றி வைத்தேன் தாயே -இங்கு
நித்தம் என்னைக் காத்திடுவாய் - நீயே
கை விளக்காய் துணையிருப்பாய் தாயே! என்
கவலைகளைப் போக்கிடுவாய் நீயே!
மாலை ஒன்று கட்டி வைத்தேன் தாயே - உன்
மனதை மட்டும் எனக்கருள்வாய் நீயே
பால் பழங்கள் நான் படைத்தேன் தாயே
அதன் பலனை எல்லாம் எனக்களிப்பாய் நீயே!
தேடி தேடி அலைந்திருந்தேன் தாயே - உன்
திருவருளைக் காட்டிடுவாய் நீயே
பாடி அழுது ஏங்குகின்றேன் தாயே - இந்தப்
பாலன் முகம் பார்த்தருள்வாய் நீயே!
மங்களக் குங்குமத் தாயே
பொங்கும் மங்களம் தருவாயே!



## அம்மன் ஸ்லோகம்

ஓம் மங்களே மங்களதாரே
மாங்கல்யம் மங்களப்பிரதே
மங்களாத்தம் மங்களேஸ
மாங்கல்யம் தேஹிமே சதா.

( இதை 108 தரம் சொன்னால் நல்ல காரியங்கள் நடக்கும் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவர் பாடல்



கால வைரவா நாதா நமோ! நம!
கால அஷ்டமி தேவா நமோ! நம!

கஸ்டம் நீங்கும் குருவே நமோ! நம! காசி நாதா.......
அகிலாண்ட வைரவா ரூபா நமோ! நம!
அகந்தை அழிக்கும் சீலா நமோ! நம!
ஆலயக் காவல் தெய்வம் நமோ! நம! திரி சூ..... லா.....
ஆனந்த வைரவா தீபா நமோ! நம!
உக்கிர வைரவா பாதா நமோ! நம!
உடுக்கை ஏந்திய வீரா நமோ! நம! பல..... தே...... வா.....

கருணா மூர்த்தி சிவனே நமோ! நம!
குரோத வைரவா தேவா நமோ! நம!
காசி நாதா ஜோதி நமோ! நம! அருள் தா..... ரா...... ய்....
( கருணா - 2)

தெற்கு நோக்கம் வைரவா நமோ! நம!
சனி தோஷம் நீக்கும் தேவா நமோ! நம!
கீதை அளிக்கும் தீனா நமோ! நம! மறவா..... த....
ஏழை பங்களா மூர்த்தி நமோ! நம!
ஏழிமை அகற்றும் எழிலே நமோ! நம!
செல்வம் தந்திடும் சுவர்ணா நமோ! நம! குருநா.... தா.....
ஷேத்ர பாலா நமோ! நம! குறை தீர்ப்..... பா.... ய்.....
தனம் தந்திடும் திரு பாதா நமோ! நம!
ஜெயம் அதை அளித்திடும் சிவனே நமோ! நம!
சுவர்ண ரட்சண வைரவா நமோ! நம!
சுவர்ண ரட்சண வைரவா நமோ! நம! அருள்... தா... ரா... ய்....
ஆலயக் காவலில் அமரும் நமோ! நம! அருள்... தா... ரா... ய்....
(கால வைரவா - 2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுருமடமாதும் ஒருவனும்ஆகி
இன்பசுகம் தரும் அன்புபொருந்தி
உணர்வுகலங்கி ஒழுகியவிந்து
ஊறுசுரோணித மீதுகலந்து
பனியில்ஓர்பாதி சிறுதுளிமாது
பண்டியில் வந்து புகுந்துதிரண்டு
பதுமம்அரும்பு கமடம் இதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகள் என்ற
உருவமும்ஆகி உயிர்வளர்மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்தமடந்தை
உதரம்அகன்று புவியில் விழுந்து
யோகமும்வாரமும் நாளும் அறிந்து
மகளீர்கள் சேனை தரஅணை ஆடை
மண்பட உந்தி உலதைந்து கவிழ்ந்து
மடமயில்கொங்கை அமுதம் அருந்தி
ஓர் அறிவுஈர் அறிவு ஆகிவளர்ந்து
ஒளிநகைஊறல் இதழ்மடவாரும்
உவந்துமுகந்திட வந்துதவழ்ந்து
மடியில் இருந்து மழலைபொழிந்து
வாஇருபோஎன நாமம்விளம்ப
உடைமணிஆடை அரைவடம்ஆட
உண்பவர்தின்பவர் தங்களொடுஉண்டு
தெருவில் இருந்து புழுதி அளைந்து
தேடியபாலரொடு ஓடிநடந்து
அஞ்சுவயதாகி விளையாடியே
உயர்தருஞான குருஉபதேச
முந்தமிழின்கலை யும்கரைகண்டு
வளர்பிறைஎன்று பலரும் விளம்ப
வாழ்பதினாறுபி ராயமும்வந்து
மயிர்முடிகோதி அறுபதநீல
வண்டு இமிர்தண்தொடை கொண்டைபுனைந்து
மணிபொன் இலங்கு பணிகள் அணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதகர்போதகர் கூடிவணங்க
மதனசொரூபன் இவன்எனமோக
மங்கையர்கண்டும் ருண்டுதிரண்டு
வரிவிழிகொண்டு சுழியஎறிந்து
மாமயில்போல் அவர் போவதுகண்டு
மனதுபொறாமல் அவர்பிறஓடி
மங்கலசெங்கல சந்திகழ்கொங்கை
மருவமயங்கி இதய்அமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி
ஒருமுதல்ஆகி முதுபொருளாய்
இருந்ததனங்களும் வம்பில்இழந்து
மதனசுகந்த விதனம்இது என்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து
வளமையும் மாறி இளமையுமாறி
வன்பல்விழுந்து இரு கண்கள்இருண்டு
வயதுமுதிர்ந்த நரைதிரைவந்து
வாதவிரோதகு ரோதம் அடைந்து
செங்கையினில்ஓர்த டியும் ஆகியே
வருவது போவது ஒருமுதுகூனு
மந்திஎனும்படி குந்திநடந்து
மதியும் அழிந்து செவிதிமிர்வந்து
துயில்வரும்நேரம் இருமல்பெறாது
தொண்டையும் நெஞ்சும் உலர்ந்து வறண்டு
துகிலும் இழந்து சுணையும் அழிந்து
தோகையர்பாலர்கள் கோரணிகொண்டு
கலியுகம்மீதில் இவர்மரியாதை
கண்டிடும்என்பவர் சஞ்சலம்மிஞ்ச
கலகலஎன்று மலசலம்வந்து
கால்வழிமேல் சாரநடந்து
தெளிவும் இராமல் உரைதடுமாறி
சிந்தையும் நெஞ்சும் உலைந்மருண்டு
திடமும் அழிந்து மிகவும் அலைந்து
தேறிநல் ஆதரவு ஏதுஎனநொந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறையவன்வேதன் எழுதியவாறு
வந்ததுகண்டமும் என்று தெளிந்து
இனியெனகண்டம் இனிஎன தொந்தம்
மேதினிவாழ்வுநி லாதினிநின்ற
கடன்முறைபேசும் என உரைநாவு
தங்கிவிழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவழிகஞ்சி ஒழுகிடவந்து
பூதமுநாலுசு வாசமும் நின்று
நெஞ்சுதடுமா றிவரும் நேரமே
வளர்பிறைபோல எயிறும் உரோம
முஞ்சடையும் சிறு குஞ்சியும் விஞ்ச
மனதும் இருண்ட வடிவும் இலங்க
மாமலைபோல்யம தூதர்கள்வந்து
வலைகொடுவீசி உயிர்கொடுபோக
மைந்தரும் வந்துகு னிந்தழநொந்து
மடியில் விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரே இவர் காலம் அறிந்து
பழையவர்காணும் எனும் அயலார்கள்
பஞ்சுபறந்திட நின்றவர்பந்தர்
இடும்என வந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியும் என்று
பணிதுகில் தொங்கல் களபம் அணிந்து
பாவகமேசெய்து நாறும் உடம்பை
வரிசைகெடாமல் எடும்எனஓடி
வந்து இளமைந்தர்கு னிந்துசுமந்து
கடுகிநடந்து சுடலை அடைந்துமரினிடவாழ்வென
வாழ்வெனநொந்து
விறகுஇடைமூடி அழல்கொடுபோட
வெந்துவிழுந்துமு றிந்துநிணங்கள்
உருகிஎலும்பு கருகி அடங்கி
ஓர்பிடிநீறும் இலாதஉடம்பை
நம்பும் அடியேனை இவர்ஆளுமே.

-முற்றும்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் தோத்திரப் பதிகம்

ஒருமருப் பிரண்டு காதல் முக்கணால் வாயோ ரைத்தாம்
காதலன் பகையா றேழு கருமொழி எண்கு ணத்தான்
பெருநீதி ஒன்பான் பத்தர் பெறவருள் பிள்ளை நீர்வை
வரகண பதிதாள் வாழ்த்தி வணங்குவோம் மனத்து வைத்தே

இருவரும் அறியா ஈசன் உமையுவா பிடியா யீன்ற
திருவருள் வள்ளல் சேய்க்குச் சேட்டன்மா மாயன் போற்றும்
மருமகன் ஈழ மன்னன் அரசகே சரிமுன் ஆக்கும்
தருவளர் சோலை நீர்வைத் தயாநிதி துணையெ மக்கே

மூவரும் முனிவர்தேவர் மூவுல கவரும் ஏத்தும்
தேவர்கள் தேவன் செல்வ விநாயகன் திருமால் பாம்பாய்
மேவரு சாபம் வீட்டும் வித்தகம் விகடக்கூத்தன்
ஒவரும் துணையா யுள்ளான் இலமொரு குறையும் நாமே

நாலாய மறைக்கு நாதன் நம்பிமெய் கண்டார் தேற
நூலாய பொருணுவன்றேன் நோற்றிடில் சதுர்த்தி சட்டி
மாவாய மாற்றிப்போக மோட்சமும் வழங்கும் நீர்வை
வேலாயு தன்றன் அண்ணன் வேழமா முகத்து வேந்தே

ஐந்தரு நிழலோன் வேண்ட அகத்தியன் கலசப் பொன்னி
வெந்தற வாடும் காழி வியன்பொழில் தழையப் பாய்ச்சும்
மைந்தனே மணியே நீர்வை அரசகே சரிசெய் கோயில்
வந்தமர் வரகணேச மாகாண பதிதாள் போற்றி.

ஆறுமா முகன்பால் வள்ளி அணைதர மதங்கள் மூன்றும்
ஊறுமா கரியா யுற்றாய் உயர்வெள்ளி மலையில் முன்னே
ஏறுமா(று) ஒளவை யாரை ஏற்றுமே ரம்பா நீர்வைத்
தேறுமா தேவதேவ செய்தருள் கடைக்கண் நோக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழுவகை யாம்பி றப்பில் எனைப்பல எடுத்திங் கெய்த்தேன்
வழுவகை யிலாதே ரம்பவாரமாய் நினையே வாழ்த்தித்
தொழவரும் தொடர்பு தந்தாய் தூயனாய்த் தொண்டே பூண்டு
கழலிணை காப்பாய் மேவக் கடைக்கணித் தருளெந்தேவே.

எட்டுரு வானே ஏந்தல் அரசே சரிக னாவில்
பட்டுணர் வித்த பண்பால் பவித்திர தீர்த்தம் பார்த்தே
மடடுறு மலர்க்கா மத்தி மாண்புற எடுத்த கோயில்
நட்டுற நிற்கும் நம்பி நாட்டுக அருளெம்பாலே.
(நாட்டுற - நட்டுற -குறுக்கல்விகாரம்)

ஒன்பது கோளும் நாண்மூ வொண்பதும் ஒற்றும் கூற்றும்
வன்பகை வினையும் தோயும் வறுமையும் எமையென் செய்யும்
அன்பது செய்வார்க் காத்த னாகின்ற தெய்வத் தந்தி
என்பது மத்தாள் எங்கள் அரனெனச் சார்த லாலே.

பக்தருக் கருளும் பாலச் சந்திரா பாதம் போற்றி
சித்தருக் குகந்த புத்தி சித்திகள் தருவாய் போற்றி
எந்தருக் கிடியே! என்றும் ஏழையர் தோழா போற்றி
நித்தருக் கினியாய் நீரவை நித்தியா னந்தா போற்றி.

போற்றியோம் கணேசா போற்றி ஜய ஜய போற்றி போற்றி.

ஆவரங்கால் சுப்பிரமணியம் பண்டிதர் அவர்களால் ஆக்கப்பட்டது.

நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம் ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்.

அப்துல்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிபாட்டு மலர்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்-விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணியின் கனிந்து -ஔவையார்

கைத்தல நிறைகனி யப்பமோ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துயரதுகெட சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கணம் மணமருள் பெருமானே.

-அருணகிரிநாதர் திருப்புகழ்

காடுவெட்டிப் போட்டுக் கூடிய நிலத்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர் வீடுகட்கு
அன்றைக்கு வந்தளங்கள் அம்மா இலக்குமியே
என்றைக்கும் நீங்கா திரு -பாடுபவர் முத்தப்பசெட்டியார்.

காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே -திருஞான சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குனித்த புருவமும் கொவ்வைச் செவ் வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே- அப்பர்

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒன்பொரு ளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒருவரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
துணையாயென் நெஞ்சம் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே -அப்பர்

தொடுக்கும் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழன் ஒழுங்குநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்கும் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்ச்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்தில்அழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்தும் இள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. குமரகுருபரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவஸ்வக
தத் சவிதுர்வரேன்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ நப்பிரசோ தயாத்.

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

### மங்களம்

சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரி மனோஹராய சாஸ்வதாய மங்களம்
குருவராய மங்களம் தத்தாத்ரேய மங்களம்
கஜானனாய மங்களம் ஹடானனாய மங்களம்
சாந்தசக்தி மங்களம் ஸர்வசக்தி மங்களம்
சீதாராம மங்களம் ராதக்ருஹ்ண மங்களம்
மங்களம் மங்களம் மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் மங்களம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி சோமதேவக்குருக்கள் ஸ்ரீமதி.ஜெயந்தி அம்மா அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்--

பிறப்பு:18.03.1965ம் ஆண்டு
தந்தையார்:-S.V. மாணிக்கஜயர் (இந்தியா)
தாயார்:-மாணிக்கஜயர் தேவசேனா
இளமைக்கல்வி:-யா நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி

திருமணம்:-13.04.1985ம் ஆண்டு
பிள்ளைகள்:-4ஆண்பிள்ளைகள்-வரப்பிரதன்,சிவஜெயன்
நிதர்சனன்,சிந்துகேயன்
2பெண்பிள்ளைகள் மனுப்பிரியா,சாருகேசனி
மருமகள்:- வாணி
பேரப்பிள்ளை:-சி..ஹரிசாகித்தியன்
அறுபதாண்டு கொண்டாட்டம் 24.01.2015
சிவபதப்பேறு:04.09.2021 ஆவணிமாத அபரபக்க திரயோதசி (சனிப்பிரதோசம்) நன்னாள்

தந்தையாரின் சிவபதப்பேறு கிரியைகளை சிறப்பாக நடாத்தி வைத்தார். தாய்வழிப் பேரன் சதாசிவஜயர் அவரின் சிவகதிக்கிரியைகளையும் சிறப்பாக செய்து வைத்தார்.பேர்த்தியார் புவனேஸ்வரி அம்மாவின் முத்திப்பேறு வைபவங்களையும் முன்னின்று நடாத்தினார்.மேலும் மாமன் வழிப்பேரன் கார்த்திகேயஜயர் அவர்களின் ஆத்மசாந்தி கிரியைகளையும் நடாத்தி வைத்தார்.அத்துடன் சிலகாலம் கழிய தனது மாமனார் சாம்பசதாசிவக்குருக்கள் மாமியார் கௌரிஅம்மா அவர்களின்இறைபதப் பிராப்தி கிரியைகளையும் முன்னிற்று சிறப்பாக நடாத்தி வைத்தார்.ஆண்பிள்ளைகளின் பூநூல் சடங்குகளையும், பெண்பிள்ளைகளின் ருதுசாந்தி கிரியைகளையும் சிறப்பாக நடாத்தி வைத்தார்.தாயாரின் 80வயது பூர்த்தி நாளை உற்றார் உறவினர்களுடன் சிறப்பாக கொண்டாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.எல்லாவற்றிற்கும் மேலாக அரசகேசரிப்பிள்ளையாரின் சிறந்த அடியாராக விளங்கினார்,பிள்ளையார்கதை, வரலக்சுமி, கேதாரகௌரி,நவராத்திரி, சிவராத்திரி வைகுண்ட ஏகாதசி,கந்தசஸ்டி முதலான விரதங்களை அனுஸ்டித்து சிறந்த சைவஅம்மையாராக விளங்கினார்,உற்றார் உறவினர்களின் கொண்டாட்டங்களில் பங்கு கொண்டுநல்ல பண்பான இல்லறத்தி என்ற பெயரைப் பெற்றார் எல்லாருடைய மனதிலும் இடம்பிடித்து வாழ்ந்தார்எதிர்பார்க்காத அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாததது மேலும் சிலகாலம் வாழ்ந்திருந்தால் எல்லோருக்கும் மகிழ்ச்சியே ஆனால் அதை இறைவன் விரும்பவில்லை அன்னாரின் ஆத்மா சாந்திக்கு பிரார்த்திப்போமாக.

ஓம்சாந்தி சாந்தி சாந்தி

குடும்பத்தினர்

இந்த உலகில் எப்படியும் வாழ்ந்தேயாக வேண்டும் என்றஅளவுக்கு இங்கே இன்பங்கள் கலந்துள்ளன.இதைப் போலவே உடனடியாய் மடிந்தேயாக வேண்டும் என்னும் அளவுக்குத் துன்பங்களும் நிறைந்துள்ளன.

ஓர்லிங்கன்

பலரைச்சிலகாலமும்,சில்ரைப் பல காலமும் ஏமாற்றலாம்

ஆபிரகாம்லிங்கன

இயற்கை ஒருபோதும் நன்மை பேசுவதைவிட பேசாமல்இருப்பதே மிக்க பயனை அளிப்பதாம்.

காந்தியடிகள்

*"உலகெல்லாம் ஒரு பெருங்கனவு- அஃதுளே*
*உண்டு,உறங்கி,இடர்செய்து,மறைந்திடும்*
*கலக மானிடப் பூச்சியின் வாழ்க்கை*
*கனவிலும் கனவாகும்" பாரதி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை உரை

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலய குரு பாரம்பரியத்தில் வந்த ஸ்ரீமதி.ஜெயந்தி சோமதேவக்குருக்கள் சிவபதமடைந்து ஓராண்டு நிறைவு பெற்றது என்பதை நம்பவே முடியவில்லை.

ஸ்ரீமதி.ஜெயந்தி அம்மையார் அவர்கள் நீர்வையூரையே பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர் இவ்வூரின் பிரதான ஆலயங்களுள் ஒன்றான அரசகேசரிப்பிள்ளையார் திருக்கோயிலில் பிரதமகுருவை மணம் செய்து அவரது காரியங்கள் யாவிலும் கைகொடுத்தார், நிறைவான சந்தான பாக்கியம் பெற்றவர் எல்லோருக்கும் உதவுவதில் அவருக்கு நிகர் அவரே யாருக்கும் இல்லை என்றாது உதவும் பண்பு அவருடையது.

தனது உடல் நிலையை சிந்தியாது நீண்ட தூரப் பயணங்களை செய்வதும் இயன்ற அளவு உதவுவதும் அவரது பண்பு.

அது போல பலவகை உணவு வகைகளை தயாரிப்பதில் அவர்நிகர் அற்றவர்.

வாழ்வானது மாயம் என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அருள்வாக்கு அப்படி இதுவும் ஏதோ நடந்து விட்டது இனி அவர் அமருலகில் வீற்றிருந்து தம் குழந்தைகளை வழிப்படுத்த வேண்டுவோம்.

அவரது ஆத்மா பாலாம்பிகை நாதரான வைத்தீஸ்வரப் பெருமானின் திருமலரடியில் இணைய இறைஞ்சுகின்றோம்.

வேறு செய்யும் திறமிலோம் வேறென்ன செய்வோம் சிவ சிவ என்று அமைதி காணுகிறோம்.

சிவ சிவ'

பிரதமகுரு<br>
செல்லக்கதிர்காமகோவில் நீர்வேலி.<br>
சிவஸ்ரீ.கு.தியாகராசாக்குருக்கள்<br>
(நீர்வை மணிஐயா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழகுவதற்கு இனியவர் பண்பிலே பெரியவர்.

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ.சோமதேவக்குருக்களின் இல்லத்தரசியாக விளங்கிய பெருமைக்குரியவர் அமரர் ஜெயந்தி அம்மா ஆவார்.

மருந்தே ஆயினும் விருந்தோடு உண் என்பது ஔவையாரின் கூற்று அதாவது சிறிதளவு உணவுதான் இருந்தாலும் அதனை விருந்தினரோடு பகிர்ந்து உண் என்கிறார் ஔவையார்.ஜெயந்தி அம்மா என்றதும் நம் எல்லோருடைய மனக் கண்களில் விரிவது அவரது விருந்தோம்பல் பண்பு தான்.

அவரது விருந்தோம்பல் சிறப்பில் - பாகுபாடு இருக்காது -பேதங்கள் இருக்காது இதனால் எல்லோராலும் அம்மா என உயர் ஸ்தானத்தில் பேணப்பட்ட பெருமாட்டியாக ஜெயந்தி அம்மா திகழ்ந்தார்.

குருத்துவப் பாரம்பரியத்தில் வந்த சிவஸ்ரீ மாணிக்க ஐயாவின் மகளாக இருந்த இவரின் சிறப்புணர்ந்து பெரியோர்களின் அரசகேசரிப் பிள்ளையாரின் பிரதம குரு சிவஸ்ரீ.சோமதேவக்குருக்களின் இல்லத்தரசியாக்கினர்.வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து நான்கு ஆண்பிள்ளைகளையும் இரண்டு பெண்பிள்ளைகளையும் இந்த உலகிற்கு அம்மையார் ஈர்ந்தார்.

எமது கோவில் சார்ந்த நடவடிக்கைகளில் பரிபாலன சபையினரதும் பக்தர்களினதும் செயற்பாடுகளுக்கு ஆதரவாக விளங்கினார். கோவில் காரியங்கள் சிறப்புடன் இடம்பெறப் பாகசாலை சார்ந்து தனது தனித்துவ ஆளுமைகளை வெளிப்படுத்தினார்.

அம்மாவின் உறுதுணையே எமது குருக்களின் வெற்றிக்கு அடிப்படையாக அமைந்தது விதி வலியது என்பதை இலக்கியங்களின் வாயிலாகவும் வாழ்வியல் யதார்த்தமாகவும் தரிசித்த வண்ணம் இருக்கின்றோம். ஜெயந்தி அம்மையாரின் இழப்பு நாம் யாருமே எதிர்பார்க்காததருணத்தில் நேர்ந்தது கொவிட் நெருக்கடி நிலையில் எமது மன ஆறுதலுக்குக் கூட அம்மையாரின் பூதவுடலைத் தரிசித்து அஞ்சலி செலுத்தக் கூடிய வாய்ப்பு இல்லாத துர்பாக்கியரானோம் அம்மையாரின் ஆன்மா சாந்திபெற பிரார்த்திப்பதோடு எமது குருக்கள் ஐயா குடும்பம் ஆறுதல் பெற்றுத் தொடர்ந்து அருட்பணியாற்றிடவும் விநாயகப் பெருமானை வழுத்துகின்றோம்.

ஆலய பரிபாலனசபை
நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அகில இலங்கை இந்து இளையோர் முதியோர் நலன்புரி மன்றம்
සමස්ථ ලංකා තරුණ සහ වැඩිහිටියන්ගේ සුභ සාධක සංගමය
ALL SRI LANKA YOUTH AND ELDERS WELFARE SOCIETY
T.P. 071-2361606, 077-9426412
பதிவு இல: HA/4/CBO/180

N. Senthuran
Secretary

Mrs. V. Revathy
Treasurer

T. Velauthapillai
President

"பொதுமக்களிடம் பணம் பெறுவதில்லை எமது முயற்சியே துணை"

7/1, Fonseka Road,
Mount Lavinia

இரங்கல் உரை

சிவபூமியாம் யாழ் மண்ணில் பிரசித்தி பெற்ற விநாயகர் ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் எமது நீர்வேலி அருள்மிகு ஸ்ரீஅரசகேசரிப்பிள்ளையார் கோயில்- ஸ்தானிக சிவாச்சாரியார் சிவாகம சாகரம்,பிரதிஷ்டா சாகரம் ஆகமகலாசூரி, சிவாகம கிரியா ஞானபானு கிரியாஞான வித்தகர், பிரதிஷ்டா கிரியா வித்தகர்,சிவாகமரத்னா சிவஸ்ரீ. சா.சோமதேவ சிவாச்சாரியர் அவவர்களின் வலது கையாகவும் கோயில் குடும்பம்,நற்பணிகள் பலவற்றிற்கும் ஆலோசகராகவும். அன்றிலிருந்து பக்கதுணையாக இருந்து அரும்பணியாற்றி வந்த அவரது துணைவி ஜெயந்தி அம்மா அவர்கள் கடந்த ஆண்டு சிவபதமடைந்ததையிட்டு மேற்படி அகில இலங்கைசிறுவர் முதியோர் நலன்புரி மன்றமும் எனது குடும்பமும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெறுதற்கரிய பிறவி மானிடப் பிறவியே, அதிலும் கூன்,குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிதிலும் அரிதே அதிலும் எல்லாப் பிறப்பிலும் மேலான பிறப்பாகிய அந்தணர் குலத்தில் பிறந்து ஸ்தானீக சிவாச்சாரியாரும் கிரியா வித்தகரும்,பிரதிஸ்டா கிரியா வித்தகரும்,மற்றும் சிவாகம ரத்னவராகிய சிவஸ்ரீ.சா.சோமதேவ சிவாச்சாரியார் அவர்களுக்கு மனைவியாககிடைத்தமை முன்னைய பல பிறவிகளின் தவம் செய்து பெற்ற பலனே என்று தான் கூறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரின் மணாளன் உறக்கத்திலிருந்தாலும், பூசைக்காக வெளியே சென்றிருந்தாலும் யாகசாலையில் யாகம் செய்து கொண்டு இருந்தாலும் முக்கிய விடயங்கள் கலந்துரையாடலில் இருந்தாலும் அடுத்த நிகழ்ச்சி எப்போ என்பதை அடுத்த பூசை நேர ஒழுங்குகள் கடமைகள், எவை என்பது பற்றியும் துல்லியமாக ஆராய்ந்து அறிந்து கண்சாடை மூலம் உடனுக்குடன் மறக்காது அவருக்கு கூறி குடும்பத்தில் மனைவியாகவும், அரசியலில் மந்திரியாகவும் கோயில் நிர்வாகியாகவும் பிள்ளைகளுக்கு தாயாகவும் மாண்புமிகு ஜெயந்தி அம்மா அவர்கள் பக்க துணையாக கணவருக்குஅருசிலிருந்து சேவையாற்றி வந்தததை யானும் கோயிலுக்குப் போகும் வேளையில் பலமுறை கண்டுள்ளேன்.

மேற்படி எமது மன்றத்தில் சார்பாக விநாயகர் பெருமானின் அருளினால் கடந்தபல மாதங்களாக ஆத்மீக நூல்களை அடியார்களுக்கு இலவசமாக வழங்கிக்கொண்டிருந்தோம், கொரோனாவால் போக்குவரத்து சீரின்மையாலும் சில மாதங்கள் தொடர்ந்து வழங்கமுடியாமல் போய்விட்டது இருந்தும் அவன் அருளால் தொடர்ந்தும் ஆத்மீக நூல்கள் வெளிவரும் என்பதை இனிமேல் வரும் ஆத்மீக நூல்கள் யாவும் அன்னாராகிய ஜெயந்தி அம்மாவின் ஞாபகார்த்தமாக வெளிவரும்என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கிறேன்.

இவரது சேவை கோயில் பரிபாலனத்துக்கும் கிராமத்துக்கும் எங்களைப் போன்ற வெளிஉலக விநாயக அடியார்களுக்காகதொண்டர்களுக்கும் பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீ அரச கேசரிப்பிள்ளையாரை சிரம் தாழ்த்தி ஆத்ம சாந்தி வேண்டி இரங்குகின்றோம்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி சாந்தி !!!

இங்ஙனம்
த.வேலாயுதபிள்ளை
தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமுருகன்
# Thirumurugan
## மணி மண்டபம் & பல்பொருள் அங்காடி
## Mani Mandapam & Multy Centre



நடராசா சிவசுப்பிரமணியம் (செட்டியார்)
Prop. Nadarasa Sivasubramaniyam (Chettiar)

T.P.No.: 021 223 0181, 077 666 0211
077 662 4593, 077 508 1580

கரந்தன் வீதி, நீர்வேலி.
Karanthan Road, Neervely.

## மறப்போமா

திருமதி.சோமதேவக்குருக்கள் ஜெயந்தி அம்மா அவர்கள் பிறந்த நாட் தொடக்கம் மிகக் கூடுதலாக எம்மோடு கூடிப்பழகி வாழ்ந்தவர். அவர் எங்களில் ஒருத்தராகவே வாழ்ந்தவர், தந்தையார் திரு.மாணிக்கையா அவர்களும் தாயாரும் என்றும் புன்னகை சிந்தி யாவராலும் அன்பாய் பண்பாய் உயர்ந்து சிறந்தவர்கள், அதுபோல் ஜெயந்தி அம்மா அவர்களும் பொன்னகை விஞ்சிய புன்னகை சிந்தி அன்பாய் பண்பாய் வாழ்ந்தவர், காலன் செய்த கொடுமையால் இடைவழியில் பூவோடும் பொட்டோடும் அரசகேசரியான் பாதம் அடைந்து விட்டார் இதனால் இவர் குடும்பம் மிக தீரா கவலையடைந்துள்ளனர். அன்னாரின் ஆத்மா சாந்திக்காக நாம் திருமுருகன் தாழ் பணிந்து வேண்டுவோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி !!!

என்றும் மறவா நினைவில்
ந.சிவசுப்பிரமணியம் (செட்டியார்)
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மசாந்தி பிரார்த்தனை செய்தி.

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் பிரதம குரு சாம்பசதாசிவக் குருக்கள் சோமதேவக்குருக்களின் அன்புத் துணைவியான ஸ்ரீமதி.ஜெயந்தி அம்மையார் இறைவனடி சேர்ந்து ஒரு வருடப் பூர்த்தியடைந்து விட்டது என்பதை ஒருவராலுமே ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ஸ்ரீமதி ஜெயந்தி அம்மையார் நீர்வேலிக் கிராமத்தில் 1965ம் ஆண்டு தொடக்கம் சைவமும் தமிழும் கமழும் வண்ணம் வாழ்ந்த அம்மையார் ஆவார். 1971 தொடக்கம் 1980 வரை க.பொ.தா.சாதாரண தரம் வரை என்னுடன் கல்வி கற்று சமகாலத்தவராவர் அவர்கள் கல்வியில் சிறந்து விளங்கினார். ஆங்கில பாடத்தில் விசேட கவனம் செலுத்தி அதிகூடிய மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவியாகத் திகழ்ந்தவர் ஆவார். அவரின் இப்புலமைத்திறன் அவர் தம் பிள்ளைகளின் கல்விக்கும் பெரும் உறுதுணையாக மிளிர்ந்ததுஎனலாம்.

எனது பாடசாலைக்கால நண்பியாகவும் பிரதமகுருஜயாவின் பாரியாராகவும் இருந்ததால் நெருங்கிப்பழகும் வாய்ப்புகள் கிடைத்தன அவரும் அவரின் குடும்பத்தவர்களும் எனது தொழில் நிமிர்த்தம் தேவைகளை நிறைவேற்ற, ஆலோசனைகள் பெறவும் என்னுடன் தொடர்பில் இருக்கின்றார்கள். அம்மையாரின் இழப்பை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நீர்வேலி அரசகேசரிவிநாயகரை வேண்டிக் கொள்கிறேன்.

'மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்'

சு.சண்முகவடிவேல்
கிராமஅலுவலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சமதில் நீங்காது நிலைத்து நிற்பவர்

**திருச்சிற்றம்பலம்**

நின்அடியே வழிபடுவான் நிமலா நினக்கருத
என்அடியான் உயிரை வவ்வேல் என்றடற் கூற்றுரைத்த
பொன் அடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும்
நின் அடியார் இடர்களையாய் நெடுங்களமேயவனே.

திருச்சிற்றம்பலம்

இப்பதிகம் சம்பந்தமூர்த்தி நாயனரால் நெடுங்களம் பெருமான் மேல் பாடப் பெற்றது பொன்ன அடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும் அறநெறி பூண்டெழுதுபவர்கள் தான் எமது அரசகேசரிபிள்ளையார் கோவில் பூசை மகோற்சவம் மற்றும் பல புண்ணிய கருமங்களை நடாத்தி வரும் குருக்கள் ஐயா குடும்பத்தினர்.

இந்தவகையில் ஆசிரியராகவும் தலைமை ஆசிரியராகவும் கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து அமரரான வணக்கத்திற்குரிய கார்த்திகேயர் குருக்கள் அவர்தம் பாரியார் திருமதி குப்பம்மா இவர்களின் சிரேஸ்ட புதல்வர் அமரர் வணக்கத்திற்குரிய சாம்பசதாசிவக்குருக்கள் சீருறு துணைவியார் கௌரி அம்மா இவர்களின் உத்தம புத்திரர் வணக்கத்திற்குரிய சோமதேவக்குருக்கள் ஐயா ஆகியோரின் அறிவுரைகள் அறறவுரைகள், வழிகாட்டல்கள் ஆகியவை எனது வாழ்க்கைப் பாதையில் என்னால் மறக்க முடியாத அனுபவங்களாகும்.

எமது விநாயகர் ஆலயத்தில் இருபத்தைந்து(25) வருடங்களிற்கு மேலாக பிரதமகுருவாக இருந்து சிறப்புக் கருமமாற்றி வருகைதரும் அடியார்கள் குறைகளைந்து நிறைவாக்கி உள்ளங்களில் அழியாத நிலைத்த இடத்தைப் பிடித்தவர் தான் வணக்கத்திற்குரிய சோமதேவக்குருக்கள் அவர்களாவர் குருக்கள் ஐயா அவர்களின் இல்லறம் நல்றமாக இணைந்து கொண்ட வரே இன்று நாம் இழந்து கலங்கி நிற்கும் பேரன்பிற்குரிய ஜெயந்தி அம்மா அவர்கள் தன் பதியின் குறிப்பறிந்து தவறாது கடமை புரியும் பதிவிரதை இவரே.சிறு பிள்ளை பராயத்திலிருந்தே அம்மாவை தெரிந்திருந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் குருக்கள் ஐயா குடும்பத்தில் மருமகளாய் திருமகளாய் வந்தபின் என் குடும்பத்திற்கும் அம்மாவிற்கும் இடையே அன்புறவாடல் பெருகிதாயிற்று.கண்டு விட்டால் போதும் என்ன? எப்படி?என்று விசாரித்து தன்னாலான உதவிகள் செய்வார் நானும் விசுவாசமாகவும் அன்பாகவும் இருந்தேன் நாங்கள் கனவிலும் நினைக்கமுடியாதது நனவாகி விட்டது என்ன செய்வோம் அமரரான அம்மாவின் தாயாருக்கும் எனக்கும் வயது சிறிது வித்தியாசமே நாங்கள் தடுமாறி தத்தளிக்க நோயுற்ற உடலை உதறிவிட்டு பூவோடு பொட்டோடு நித்திய சுமங்கலியாக இறைபதம் அடைந்துவிட்டார் அரசகேசரி விநாயகர் அம்மாவின் ஆன்மாவிற்கு பேரின்ப பெருவாழ்வு அருளுவார் என பிரார்த்தித்து எமது உள்ளங்களில் நீங்காது நிலைபெற்றுள்ள அமரரின் உத்தமநாயகா குருக்கள் ஐயா அவர்கட்கு மகன்மார்,மகள்மார்,மருமகள், தாயார், பேரப்பிள்ளைகள் மற்றும் குருக்கள் ஐயா குடும்பம் சார்ந்த அனைவருக்கும் ஆறுதலை தெரிவித்து எம்மிடையே நீங்காது நிலை பெற்றுவிட்ட அம்மாவை சிரம்தாழ்த்தி அஞ்சலி செய்து விடைபெறுகிறேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

நடேசன் குடும்பம்

## மனித தர்மம்


| | | |
|---|---|---|
| ஏழ்மையிலும் | - | நேர்மை |
| கோபத்திலும் | - | பொறுமை |
| தோல்வியிலும் | - | விடாமுயற்சி |
| தரித்திரத்திலும் | - | பரோபகாரம் |
| துன்பத்திலும் | - | தைரியம் |
| செல்வத்திலும் | - | எளிமை |
| பதவியிலும் | - | பண்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

◆ அமரர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சார்ந்த நன்றிகள்

எங்கள் குலதெய்வம்
எமை விட்டு பிரிந்த வேளை எங்களுக்கான
'காலத்துயரை'
ஆறுதல் கரம் நீட்டி
துயர் பகிர்ந்து... அஞ்சலி செலுத்தி
ஆத்மசாந்திக்காக பிரார்த்தித்து
இன்று வரை
எம் உணர்வுகளை பகிர்ந்து கொண்ட
அனைத்து அன்புள்ளங்களுக்கும்
எம் உளமார்ந்த நன்றிகள்

'காலத்தினாற் செய்தநன்றி சிறிதெனிலும்
ஞாலத்தின் மாணப் பெரிது' திருவள்ளுவர்

என்றும் அன்புடனும்
நன்றியுடனும்
குடும்பத்தினர்.

பி.ஆர்.எஸ் பிறின்ரேர்ஸ் நீர்வேலி செராவிலத்தை வீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்!
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்!
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்!
அன்பெனப்படுவது என்னெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்!
பாசமென்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்!
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்!
முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
வறுமை என்பது என்னெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்!
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்!
"அனுபவித்தே தான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவன் நீ ஏன்" எனக் கேட்டேன்!
ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி
"அனுபவம் என்பதே நான் தான்" என்றான்!

- கவிஞர் கண்ணதாசன் -

பி.ஆர்.எஸ் பதிப்பகம் - கோலவெத்தை ஒழுங்கை, நீர்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org